DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, PALLADAM

Calender

Miscellaneous Case No:CC 189 of 2017

Preliminary Register

Sessions

Deposition of Witness for PW 2

Name : திரு.கார்த்திக்

Age : 34

Father's/Husband's Name : குப்புசாமி

Village : நல்லகாளிபாளையம்

Taluk : திருப்பூர்

Occupation : பனியன் கம்பெனி

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 28th day of September 2021

முதல் விசாரணை: நாள்:28.09.2021

நான் தற்போது மேற்கண்ட முகவரியில் குடியிருந்து தனியார் நிறுவனத்தில் வேலை செய்து வருகிறேன். தேதி, மாதம் ஞாபகமில்லை, சுமார் 7, 8 வருடங்களுக்கு முன்பு ஒருநாள் நான் குப்புச்சிபாளையத்தில் உள்ள எனது தோட்டத்திலிருந்து அவினாசிபாளையம் செல்லும் மெயின் ரோடு வழியாக வந்துக்கொண்டிருநதேன். அப்போது மணி சுமார் 11 அல்லது 12 இருக்கும். அப்போது குப்புச்சிப்பாளையத்தில் உள்ள ரேவதி ரைஸ் மில் அருகில் விபத்து ஏற்பட்டதாக கூட்டமாக நின்றுகொண்டிருந்தார்கள். நான் சென்று பார்த்தேன். அதை பற்றி கேட்டபோது ஏதோ

ஒரு கார் மோதி விபத்து ஏற்பட்டதாக சொன்னார்கள். பின்பு நான் அங்கிருந்து சென்றுவிட்டேன். மேற்படி விபத்தை ஏற்படுத்திய காரை ஓட்டிய நபர் யார் என்று எனக்கு தெரியாது. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

அரசுதரப்பில் சாட்சி அரசுதரப்பிற்கு விரோதமாக சாட்சியம் அளித்துள்ளதால் அவரை பகுதி பிறழ்சாட்சியாக கு.வி. செய்ய அனுமதி கேட்டு அனுமதி வழங்கப்பட்டது.

அ.த.கு.வி.

ஆஜர் எதிரியை தெரியும். அவர் எனக்கு உறவினர் என்ற முறையில் தெரியும். எதிரி எதற்காக நீதிமன்றத்திற்கு வந்துள்ளார் என்று தெரியுமா என்றால் தெரியாது. இன்று நீதிமன்றத்தில் எதிரியுடன் பேசினீர்களா என்றால் இல்லை. ஆஜர் எதிரி எனக்கு அப்பா வழி சொந்தம் ஆவார். இந்த சம்பவம் குறித்து போலீஸ் விசாரணையில் 02.05.2012 அன்று காலை 11.30 மணியளவில் வியாபாரம் சம்பந்தமாக திருப்பூர் செல்வதற்காக முத்துநகர் பஸ் ஸ்டாப்பில் நின்றுகொண்டிருந்ததாகவும், அப்போது திருப்பூர்–தாராபுரம் ரோட்டில் வடக்கிலிருந்து தெற்காக டிவிஎஸ் எக்செல் பதிவு எண் TN 39 AK 6622 என்ற வண்டி உகாயனூர் ரோட்டில் செல்வதற்காக இண்டிகேட்டர் போட்டுவிட்டு மெதுவாக வலதுபக்கம் திரும்பி வந்துகொண்டிருந்தபோது தெற்கிலிருந்து வடக்காக அதிவேகமாகவும், அஜாக்கிரதையும் ஆஜர் எதிரி ஓட்டிவந்த கார் பதிவு எண் TN 23 AQ 1474 என்ற காரை வெங்கடாசலம் என்பவர் ஓட்டிவந்த டிவிஎஸ் எக்செல் மீது மோதியதாகவும், அதில் வெங்கடாசலம் தூக்கி எறியப்பட்டு கீழே விழுந்ததில் அடிபட்டு தலை, கை, கால் பகுதியில் பலத்த காயம் ஏற்பட்டதாகவும், அப்போது ஆம்புலன்சில் மேற்படி காயம்பட்ட நபரை திருப்பூர் அரசு மருத்துவமனைக்கு அனுப்பிவைத்ததாகவும், அந்த விபத்தில் ஈடுபட்ட ஆஜர் எதிரி காரின் பதிவு எண்ணை பார்த்ததாகவும், மேற்படி விபத்தையும் நேரில் பார்த்ததாகவும், சொல்லிவிட்டு தற்போது ஆஜர் எதிரி எனது அப்பா வழி உறவினர் என்ற காரணத்திற்காக அவரை இந்த வழக்கிலிருந்து காப்பாற்றவேண்டும் என்ற நோக்கத்திற்காகவும் சாட்சியத்தை மாற்றி கூறி பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

எதிரி தரப்பு குறுக்குவிசாரணை:

எதிரி தரப்பு குறுக்குவிசாரணை இல்லை.

மறுவிசாரணை: இல்லை

சாட்சி விசாரணை என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைகள் திருத்தப்பட்டு சரிபார்க்கப்பட்டது. சாட்சியிடம் கொடுத்து அவர் படித்து பார்த்து சரியென கையெழுத்து செய்தார்.

ஒம்/து.ஹரிராம்
நீதித்துறை நடுவர்
பல்லடம்